அரசாங்கம் ஏதும் செய்ய முடியாது. அந்த உண்மை அரசுக்குத் தெரியுமானால், அவர்களை தனியிடத்தில் வைத்து சிகிச்சை செய்ய முடியும். இப்பொழுது, ஒவ்வொரு தாலூகா மருத்துவ மனையிலும் 6 படுக்கை கொண்ட பகுதி இந்நோயாளிகளுக்காக இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக, தாலூகா தலைநகரங்களில் தனி மருத்துவ நிலையம் ஏற்படுத்துவது என்பது மிகப் பெரிய விரிவான திட்டம். அந்த அளவுக்கு நோயாளிகள் இருக்க மாட்டார்கள்.

Tuberculosis Chemotherapy Centre, Madras

* 167 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether free X-ray check-up was done by the Tuberculosis Chemotherapy Centre at Chetput, Madras during August 1972 ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) 1972-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் விடுதலை நாள் வெள்ளி விழா கொண்டாட்டத்தின்போது சுமார் 50 பேர்களுக்கு இலவசமாக எக்ஸ்-கதிர் படங்கள் எடுக்கப்பட்டன.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, பொருளாதார நிலையில் பின்னணியில் இருக்கும் ஏழைகளுக்கு உதவியாக மாநிலத்திலுள்ள ஏனைய பகுதிகளுக்கும் இவ்வசதி விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சில மருத்துவ மனைகளில் இந்த எக்ஸரே-கதிர் படம் எடுக்கின்ற பகுதி இருக்கிறது. அது வசதியற்ற ஏழை மக்களுக்கு இலவசமாகத்தான் இருக்கும். அதற்கான சிகிச்சை முறைப்படி நடைபெறும். ஆனால், இங்கே நடைபெற்ற வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின் அடையாளமாக சென்னையில் கெமோ தொரப்பி சென்டருக்காக செஸ்ட் இன்ஸ்டிடியூட்டில் 50 புற நோயாளிகளுக்கு கதிர்ப் படம் எடுத்துத் தரவேண்டுமென்று கேட்டார்கள். அது எடுத்து தரப்பட்டிருக்கிறது. அது வெள்ளி விழா நிகழ்ச்சியை ஒட்டி ஏழைகளுக்குச் செய்திருக்கிற சிறப்புப்பணி என்ற முறையிலே செய்யப்பட்டிருக்கிறது.